உ

சிவமயம்



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும்,
ஜெயந்திநகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

சிவதிருவடியின்கீழ் அமர்ந்த

# மாசானம்பிள்ளை சேதுபாண்டியர்

அவர்களின்

சிவபதப்பேறு எய்திய

ஞாபகார்த்தமாக மலர்ந்த

31ம் நாள் நினைவு மலர்

24.12.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதிருவடியின்கீழ் அமர்ந்த

# மாசானம்பிள்ளை சேதுபாண்டியர்

அவர்களின்

**சிவபதப் பேறு குறித்த**

ஞாபகார்த்தமாக மலர்ந்த

31ம் நாள் நினைவு மலர்

**24.12.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்


எம் குலத்தை காத்து
வளர்த்து உச்சாணிக் கொம்பில்
ஏற்றிவைத்து அழகு பார்த்த– திருநீறணிந்த
செம்பொற் சுடரே!
உடலை விட்டு உயிர் பிரிந்து
அருட்ஜோதியாய் இறைவனின் திருப்பாதக்
கமலத்தில் இரண்டறக் கலந்த – எங்கள்
தெய்வமே!
காலத்தால் அழியாத உங்கள்
சொல், செயல், வாக்கு சிரமேற் கொண்டு
வழிந்து வரும் துயரை நல்வனப்பாக்கி
இம்மலரை
சமர்ப்பணம் செய்கின்றோம்.

உளம் நெகிழ்ந்துருகும்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவாக...!



சிவதரிசனம்
22.03.1929

சிவபதம்
24.11.2014

சிவ திருவடியின்கீழ் அமர்ந்த

## மாசானம்பிள்ளை சேதுபாண்டியர்

**அவர்களின் திதிநிர்ணய வெண்பா**

சீரோங்கு ஜய வருடம் சிறந்திடும் கார்த்திகைத் திங்கள்
சித்தமாய் அமைந்திட்ட பூர்வபக்க வளர்பிறை துதியை நன்னாளில்
பேரோங்கு வட்டுக்கோட்டையில் உதித்த சிவத்தொண்டன் சேதுபாண்டியர்
சர்வேஸ்வரன் பாதக் கமலங்களில் சேர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்





## திருவருட்பாக்கள்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே

## திருவாசகம்

தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற்கிலனோர் கைம் மாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கியசுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றாதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறிவும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டுமின்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும்போது உன்னடியின்
கீழிருக்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

"பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே"

## வாழ்த்து

வையம் நீடுக மாமழை மன்றுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ செந்நெறி தான் தழைத்தோங்குக
தெய்வ வெண் திருநீறும் சிறக்கவே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# மாசானம்பிள்ளை சேதுபாண்டியர்
## அவர்களின் வாழ்க்கை வரலாறு



இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் ஈழமணித்திருநாட்டின் யாழ்ப்பாண மண்ணில் வட்டுக்கோட்டை சித்தங்கேணியை பிறப்பிடமாகக் கொண்ட சைவ வேளாண் குலத்தில் தோன்றிய ஸ்ரீமான் மாசானம்பிள்ளை அன்னம்மா தம்பதிகளுக்கு நீண்ட நாள் புத்திரபேறு இன்மை காரணத்தால் இராமேஸ்வரரை வணங்கி நேர்த்தி வைத்து தவம் செய்த காரணத்தால் உதித்த ஏகபுத்திரன் இவராவார். இராமேஸ்வரரின் நாமமாக சேதுபாண்டியர் என திருநாமம் சூட்டி இறை பக்தியுடன் வளர்த்து வந்தார்கள். தனது ஆரம்ப கல்வியை தற்போதைய வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருக்கும் வேளையில் பெற்றோரை இழந்தார். பின் தாய் மாமனின் உதவியுடன் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் காடு வெட்டி கழனியாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி குடியேற்றத்திட்டம் ஆரம்பித்த வேளையில் காட்டுக்கந்தோரில் நில அளவையாளராக பணி புரிந்து ஜெயந்திநகர் பதியில் குடியேறிய முதல் மைந்தன் ஆவார்.

குடியேறிய நாள் முதலாய் "நீங்கள் மகத்தான காரியங்களைச் சாதிக்கப் பிறந்துள்ளீர்கள்" என்ற விவேகானந்தரின் வாக்குப் போல் இக்கிராமத்திற்கு கிருஸ்ண ஜெயந்தி தினத்தில் ஜெயந்திநகர் என திருநாமம் சூட்டியது முதல், மகாதேவ ஆச்சிரமம், குருகுலம், ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம் ஆகியவற்றை உருவாக்குவதில் சிவ அன்பர்களுடன் சேர்ந்து அரும்பணியாற்றியவர்.

"நல்லது செய் நல்லவனாக இரு" எனும் சுவாமி விவேகானந்தரின் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்த அன்பர்.

இப்படியாய் வளரும் வேளையில் சித்தங்கேணி சிவன் கோயிலடியை பிறப்பிடமாக கொண்ட அமரர்.மயில்வாகனம் (உபதபாலதிபர்) நல்லம்மா தம்பதிகளின் ஏகபுத்திரி தங்கம்மாவை கரம் பற்றி இல்லறம் எனும் நல்லறத்தை இல 10, ஜெயந்திநகர் பதியில் இனிதே நடாத்தியதன் பயனாக இராசேஸ்வரி, நாகேஸ்வரி, சத்தியேஸ்வரி ஆசிரியை (கி/புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்), நாமகள் ஆசிரியை (கிளி/ இந்துக்கல்லூரி), அருட்சோதி ஆசிரியை (கிளி/இந்து ஆரம்ப வித்தியாலயம்), அம்பிகைபாகன் அதிபர் (கிளி/பூநகரி செல்லியாதீவு அ.த.க.பாட) கேதீஸ்வரன் (சேவாலங்கா, கிளிநொச்சி), கிருபாகரன் (D.R.C) ஆகிய நற்புத்திரர்களை பெற்று "எழுந்திரு விழித்திரு இலட்சியத்தை அடைந்தே தீருவாய்" என தட்டிக்கொடுத்து உச்சாணிக் கொப்பில் ஏற்றி சீரான வாழ்க்கை துணைகளாக வேலாயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சமாதான நீதவான்), மகாலிங்கம், தர்மராசா, கஜேந்திரகுமார் (சிறுவர் பாதுகாப்பு நிதியம்), அமரர் மகேஸ்வரன், சந்திரகலா, ஞானலக்சுமி (ஆசிரியை), நிரஞ்சலா (விவசாயத்திணைக்களம்) ஆகிய மருமக்களையும் அமைத்து கொடுத்த சீராளன்.

பொறுப்பு முழுவதையும் தன் தோளிலேயே சுமந்து "பிறர் எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும் அன்பு, பொறுமை, தூய்மை, ஒழுக்கம், இறைபக்தி இவற்றிலிருந்து நீ விலகாதே" என பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஊரார்களுக்கும் அறிவுரைகள் கூறி வாழ்க்கையை செப்பனிட்ட பெருந்தகை. மீளாத் துயில் கொள்ளும் போதும் ஸ்ரீ மீனாட்சி அம்பிகை, மகாதேவ கணேசானந்த சுவாமியின் ஆசியுடனும், இறை சிந்தனையுடனும் இறைவனுடன் சங்கமமானவர்.

ஊரின் மேல் அவருக்குரிய பாசமும், ஊர் மக்கள் அவர் மேல் கொண்ட அன்பிற்கும், இவரது இறுதி அஞ்சலி நிகழ்வில் திரண்ட மக்களும், எந்த இடைஞ்சலுமின்றிக் கடமைகளைச் செய்து முடிக்க ஒத்துழைத்த இயற்கையும் சாட்சி எனலாம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

(குறள்)

ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியவர் எம்மனதில் நின்று என்றும் எமை வழி நடத்துவார் என்பது நிஜம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்ஆசி



குருவே சிவமெனக் கூறினார் நந்தி
குருவே சிவமென்பதை குறித்தோதார்
குருவே சிவனுமாய் கோனுமாய் நிற்பார்
குருவே உரையுணர் இறந்த கோவே

(திருமந்திரம்)

மேற்கூறிய திருமந்திர செய்யுளுக்கிணங்க குருமொழியே தெய்வமென தனது வாழ்க்கையை அமைத்த மகத்தான மாமனிதர்களுள் திரு.மா.சேதுபாண்டியர் அவர்கள் எடுத்துக் காட்டாக வாழ்ந்த உயர் பண்பாளர்.

மகாதேவ ஆச்சிரமத்தையும், ஜெயந்திநகர் ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தையும் உருவாக்கி, ஆலோசனை கூறுவதிலும் பண்ணுடன் திருமுறைகளை படிப்பதிலும் முன்னின்று உழைத்த மகா பெரும் மனிதர். அன்னார் இல்லற வாழ்விலும் திருவருள் கடாட்சத்துடன் சீரும் சிறப்புமாக மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் அனைவரையும் அணைத்து வாழ வைத்த பெருமகனார்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை"

இதற்கிணங்க அவர் இல்லறத்தை நல்லறமாக்கிய குலவிளக்கு.

"வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பசிநோய் செய்த பறிதான்
தாளாது அறம் செய்மின் தடம் - கண்ணான் மலரோனும்
கீழ் மேலுற நின்றான் திருக் கேதாரம் எண்ணீரே",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த மனிதப் பிறப்பு தன்னலம் கருதாது வாழ்வதற்கு இப்பிறப்பு கிடைத்தது. இதற்கு இணங்க மானிட வாழ்க்கை நிலையற்றது என்பதை குறிப்பிடுகிறார். சீவன் தான் இந்த ஆத்மா. இது ஒரு நாளும் அழிவதில்லை. இந்த மனித உடலுடன் இருந்து மாயையின் சீவித்தலாகிய தொழிலை செய்வதால் சீவன் என்ற பெயரை பெறுகின்றது. எனவே நாங்கள் செய்யும் நல்ல அறங்களை பயன் கருதாது உலகத்துக்கு செய்வதே முத்திப் பேற்றுக்கு வழி வகுக்கும். இதற்கு எடுத்துக்காட்டு அன்பர் சேதுபாண்டியர் அவர்கள் ஆவார்.

அவர் உயிர் பிரியும் வேளையில் நான்காவது புத்திரி நாமகள் ஆசிரியை "தன் தந்தையின் இறுதி நேரம் வந்து விட்டது சுவாமி என கூறினார்". உடன் சென்று "நமசிவாய" மந்திரம் ஓதி பாலும் பருக்கிய வேளை என்னை இமைவெட்டாது பார்த்து இறுதி யாத்திரை சென்றதை என் மனக்கண் மறவாது. இறுதி மூச்சிலும் மகா தேவ ஆச்சிரமத்திலும், ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்திலும் அருச்சனை செய்வித்து, அதே சிந்தனையில் ஆத்ம பிரிந்தது தெய்வச் செயலாகும்.

"தூங்குவது போலும் சாக்காடு
தூங்கி விழிப்பதுவும் பிறப்பு"

ஆகவே அவரது ஆத்மா சாந்தி பெற அருள் ஆசியும் அவரது குடும்பத்தினருக்கு அருள் ஆசி கிடைக்கவும் இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தவத்திரு கணேசானந்த சுவாமி
மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மா சாந்திக்காக வேண்டுகிறோம்!

ஒவ்வொரு மனிதனும் பிறந்தது வெற்றி பெறத்தான். தோல்வியடைய இல்லை என்ற வாக்கியத்திற்கு அமைய ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் ஆலய ஆதிகால தொண்டரும், பண்ணிசை வேந்தனும் ஆகிய அமரர்.திரு.சேதுபாண்டியர் அவர்கள் இப்பூவுலகை விட்டு சென்றாலும், சைவ மக்கள் மனதில் நீங்காத இடம்பிடித்து வாழ்ந்து கொண்டேயிருப்பார் என்பது உண்மை. அம்பாளின் அருளுடன் சைவத்திற்காகவும், சைவ மக்களுக்காகவும் அரும்பாடுபட்டு உழைத்த பெரியார், இடம்பெயர்ந்து மக்கள் அல்லல்பட்டு இருந்த வேளையில் சைவசமயம் அற்றுப்போய்விடக் கூடாது என்பதற்காகவும் சைவமக்களுக்காகவும் ஸ்கந்தபுரம், மணியங்குளம் பகுதியில் விநாயகர் ஆலயம் ஒன்றை அமைத்து சைவத்தை வளர்த்து வந்தார். இவரின் தர்ம காரியங்களால் சந்ததி சீரோடு புகழுடன் வாழ்ந்து வருகின்றார்கள். ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதை விட எப்படி வாழ்ந்தான் என்பதே முக்கியமானதாகும். இந்த வகையில் வாழும் நாளில் இறை சிந்தனையுடன் சைவத்திற்கும் சைவ மக்களுக்கும் சேவையாற்றி சிவதிருவடியில் சரணாகதி அடைந்திருக்கும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளை பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இவ்வண்ணம்
சிவாச்சாரியார் திலகம்
சிவஸ்ரீ ஜெக. ஜெகதீஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்,
குமரபுரம், பரந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மகான்!

ஓய்வில்லாது ஓடும் காலம் நாள்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கின்றது. இந்தக் கால ஓட்டத்திலே அவதரித்த மகானே பாண்டியர் ஐயா அவர்கள். தூய வெண்ணீற்றின் மரபை அவரது உடலை எப்பொழுதும் அலங்கரித்துக் கொண்டிருக்கும் அகத்தினைப் போலவே முகத்திலும் எப்பொழுதும் புன்சிரிப்பு எண்ணத்திற் சாந்தமும் இறைநாமம் அன்பொழுகும் பேச்சு அறிவுசால் புத்திகூறிச் சமூகத்தினைச் சீராக்கவேண்டுமென்னும் அவா. தான் பிறந்த சமயத்தில் பற்றுறுதி, சர்வமும் சமூகப் பணி செய்ய வேண்டுமென்னும் அவா, ஒழுக்கமும் கட்டுப்பாடுமுடைய வாழ்வியல். இவையாவும் ஒருங்கமையப் பெற்ற பெரியார். கிளி மாவட்ட மக்களின் உள்ளத்தில் மறைந்தும் மறையாத மகானாக இருப்பாரென்பது வெள்ளிடை மலையாகும்.

இல்லறமல்லது நல்லறமன்று என்றுணர்ந்த பெரியார் தங்கமான தங்கம்மா எனும் நங்கையின் கரம் பிடித்து வாழ்க்கை என்னும் படகைச் சீராக ஓட்டினார். இதன் பேறாக ஐந்து பெண் மகவுகளையும் மூன்று சற்புத்திரர்களையும் ஈன்றெடுத்து வையத்துள் வாழ்வாங்கு வாழ நல்ல கல்வியறிவுடன் ஒழுக்கத்தையும் சேவை மனப்பாங்கினையும் ஒருசேர ஊட்டி வளர்த்தார். எண்மரும் (எண் பயன்மரமாய்) உள்ளூர் பழுத்த மரமாக நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

“ஆலயந்தொழுவது சாலவும் நன்றென்று” எண்ணிய பெருந்தகை சமயக்குரவர்களைப் போல் தலயாத்திரைகளை மேற்கொண்டு ஆலய வழிபாடியற்றி வாழ்ந்து வந்தார். ஜெயந்திநகர் ஸ்ரீ மீனாட்சியம்மன், ஆலயம், திருநெறிக்கழகம், குருகுலம் போன்ற அமைப்புக்களைத் தோற்றுவித்து வளர்ச்சிபெற சக பெரியார்களுடன் தானும் ஒருவனாய் முன்னின்றுழைத்தார். மகா தேவா ஆச்சிரமத்தின் ஆரம்பகர்த்தாவான வடிவேற்சுவாமிகளின் சீடராகப் பல காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டுபுரிந்தார். ஆயிலியப் பூசைகளில் முக்கிய பங்கெடுத்துக் கொள்வார்.

ஆலயங்களிலே திருமுறைகளைப் பண்ணோடு பாடி மக்களின் உள்ளத்தில் இறையுணர்வை வளர்த்து வந்தார். ஆலய மகோற்சவத்தில் நவசந்திப் பாடல்களைப் பாடி வந்த அவரின் அப்பணியை அவரது மகளான நாமகள் கஜேந்திரகுமார் இன்றும் தொடர்ந்து செய்கின்றமை சிறப்பம்சமாகும். ஒரு அதிபரையும் மூன்று ஆசிரியைகளையும் நான்கு அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்களையும் தனது எச்சமாக இச்சமூகத்திற் பணியாற்ற வழிசமைத்துச் சென்றுள்ளார். கால அளவைக் கருத்தில் வாங்காது தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்து வருகின்றனர். பிள்ளைகளைப் போன்றே அவர்களது துணைகளையும் அரச அரசசார்பற்ற துறைசார்ந்த அலுவலர்களைத் தேடிக் கொடுத்துள்ளார். இவர்களது வாரிசுகள் இன்று வைத்தியர்களாகவும், பொறியியலாளராகவும், ஆசிரியர்களாகவும், நூலக உத்தியோகத்தர்களாகவும் உயர்தொழில் புரிபவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் கொள்ளப்படும்"

என்ற தெய்வத்தமிழ் மறை மேலும் இவற்றை வலியுறுத்தி நிற்கின்றது. ஒருவர் தான் வாழுங்காலத்தில் செய்து வந்த பணியும் புண்ணிய பாவங்களுமே மறுமைக்கும் தொடரும் என்பது சைவசமய உண்மை. மகானின் ஆன்மா இறையின் பாதார விந்தத்தை அடைவதாக.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

கலாபூஷணம் செல்வராணி சோமசேகரம்பிள்ளை J.P
கிளிமாவட்ட சைவ மங்கையர் கழகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அன்பே சிவம் அவன் அடி சேர்ந்தது"

கிளிநொச்சி மண்ணில் மூத்த பிரஜைகளில் ஒருவராக வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து சைவத்திற்கும் தமிழிற்கும் அரும்பணியாற்றிய பெரியார் ஐயா மாசானம்பிள்ளை சேதுபாண்டியர் ஆவார். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் எல்லாம் இவரின் சமயத்தொண்டு மிகவும் அமைதியான முறையில் ஆடம்பரம் இன்றி மேற்கொள்ளப்பட்டது.

ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் கோவில் அவ்விடத்தில் அமைவதற்கு இவரே முன்னின்று திருவிளச்சீட்டு எடுத்து ஆலயப்பணிகளில் முன்னின்று செயற்பட்டார். அவர் நடமாடும் காலம்வரை மீனாட்சி அம்மன் ஆலயம் மற்றும் சைவ ஆலயங்களில் சமயகுரவர் நால்வரினதும் குருபூசை தினங்களை தவறாது கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வந்தார்.

திருநெறிக்கழகம், இந்து மாமன்றம், மகா தேவா ஆச்சிரமம், குருகுலம் போன்ற சைவ நற்பணி மன்றங்களில் முன்னின்று உழைத்தவர். இவரின் சேவைகளிற்கும் நற்பணிகளிற்கும் என்றும் இறப்பில்லை. நாம் வாழும் காலம்வரை அன்னாரின் நினைவுகள் எம்முடன் வாழ்ந்திருக்கும். இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சு. பசுபதிப்பிள்ளை
ஓய்வுபெற்ற கிராம அலுவலர்,
திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெறிக்கழகம் – கிளிநொச்சி
Thirunerikazhakam - Kilinochchi

பதிவு இல
Reg.No } YA 12

தொடங்கிய ஆண்டு:1952
வங்கி : மக்கள் வங்கி

முகவரி: கிருஸ்ணன் கோவிலடி,
திருநகர், கிளிநொச்சி.

.................... தலைவர் .................... செயலாளர் .................... பொருளாளர்

சமயப்பற்றும் பரந்த மனித நேயமும் கொண்ட சிவத் தொண்டர் அமரர் சேதுபாண்டியர். மனித வாழ்க்கையில் நிறைவான செல்வங்களைப் பெற்று மனநிம்மதியோடு வாழ்ந்தவர்கள் சிலரே. அந்த சிலர் போல் சிறப்பாக வாழ்ந்து சிவன் கழல் அடைந்தவர் சேதுபாண்டியர்.

தான் வாழ்ந்த கிளி/மாவட்டத்தின் சமயம், சமூகம் வளர தன்னால் இயன்ற பணியாற்றி எம் மனத்தில் நீங்காத இடம் பெற்றவர். எமது கழகத்தின் ஜெயந்திநகரின் கிளையில் செயலாளராக கடமையாற்றி கழக வளர்ச்சிக்கு வித்திட்டவர் சேது பாண்டியராவார்.

கழகத்தின் சார்பில் மார்கழிமாத திருவாசக பஜனையை திருவெம்பா காலத்தில் அதிகாலையில் தவறாது பங்கெடுத்து எம்மையும் ஊக்கப்படுத்தியவர்.

மகாதேவா ஆச்சிரமத்தின் பணிகளைச் செய்ய முன்நிற்கும் தொண்டராக விளங்கி பலராலும் பாராட்டைப் பெற்றவர். ஜெயந்திநகர் மீனாட்சியம்மன் கோவிலின் வளர்ச்சிக்கு தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வந்துள்ளார்.

கிளி/மாவட்டத்தில் 1996ல் நடந்த இடம்பெயர்வின் போது ஸ்கந்தபுரம் மணியங்குளம் பகுதியில் மக்களின் ஆதரவுடன் ஒரு பிள்ளையார் ஆலயத்தைக்கட்டி அதற்குரிய கிரியைப்படி குடமுழுக்கு செய்து சமய உணர்வை காத்து வளர்த்த பண்பாளர்.

கோவில்களில் தேவார திருவாசகங்களை உருக்கமாய்ப்பாடி கேட்போர் நெஞ்சை உருகவைக்கும் பெரியவராக விளங்கினார். தனது பெரிய குடும்பத்துக்கு ஆற்ற வேண்டிய கடமையைச் சிறப்பாக ஆற்றி பலரால் பாராட்டப்பட்டார். தன் முதுமையில் வாழ்க்கை துணைவியை இழந்தபோதும் பிள்ளைகளின் பராமரிப்பில் நிம்மதி கண்ட பாண்டியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை குறைவடைந்தபோதும் தளராத மனவுறுதியோடு மாமனிதராக வாழ்ந்து சிவன் கழல் அடைந்தார். சேதுபாண்டியரின் பூதவுடல் மறைந்தாலும் அவர் சிறப்பாக வாழ்ந்த வாழ்க்கை எமக்கு வழிகாட்டியாக விளங்கும்.

அவரின் பிரிவால் துயரடையும் அவரின் உறவுகள் அவர் சிவன் கழல் அடைந்தார் என்று அமைதி கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

வே. மகாலிங்கம்
தலைவர்
திருநெறிக்கழகம்

அ. சிவஞானசுந்தரம்
செயலாளர்

## மூன்றால் முன்னேற .........

| | |
|---|---|
| தவிர்க்க வேண்டிய மூன்று | - புகைத்தல், குடித்தல், சூதாடல் |
| அடக்க வேண்டிய மூன்று | - நாக்கு, கோபம், ஆசை |
| ஒழிக்க வேண்டிய மூன்று | - திருட்டு, பொய், சோம்பல் |
| ஆதரிக்க வேண்டிய மூன்று | - வாக்குறுதி, நட்பு, அன்பு |
| மதிக்க வேண்டி மூன்று | - முதியோர், மார்க்கம், சட்டம் |
| போற்ற வேண்டிய மூன்று | - தைரியம், மனமகிழ்ச்சி, திருப்தி |

## மனித தர்மம்

| | |
|---|---|
| கோபத்திலும் | - பொறுமை |
| ஏழ்மையிலும் | - நேர்மை |
| தோல்வியிலும் | - விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | - பரோபகாரம் |
| துன்பத்திலும் | - தைரியம் |
| செல்வத்திலும் | - எளிமை |
| பதவியிலும் | - பண்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.மாசானம்பிள்ளை சேதுபாண்டியர் சமூகப்பற்றாளன்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் - வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற தெய்வீகப் புலவர் திருவள்ளுவர் கூற்றுக்கிணங்க எம் மண்ணுலகில் வாழ்ந்த பெருமகன் அமரர்.மாசானம்பிள்ளை சேதுபாண்டியர் அவர்களின் திடீர் மறைவானது எம்மை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியது. எனினும் **"பிறப்புண்டேல் யாவர்க்கும் இறப்பு உண்டு"** என்ற உலக நியதிக்கு இணங்க அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"செய்வன திருந்தச் செய்"** என்பது போல் தன் கடமையை கண்கண்ட தெய்வமாகக் கொண்டு சமூகப்பற்றாளனாக தன்னை அர்ப்பணித்த இவர் ஒரு அயராத சமயப்பற்றுமிக்கவர் என்றும் இறைநாமத்தை நாவார உச்சரித்தபடியே தன்வாழ்நாளைக் கழித்து வந்தார். சமூகத்தில் நிகழும் எந்நிகழ்விலும் கலந்து சிறப்பித்து தேவாரம் ஓதி இறைபுகழை தழைத்தோங்கச் செய்வதில் மிக்கவல்லவர். ஆதரவற்று அநாதரவாக விட்டுச்சென்ற குழந்தைகளை அணைத்தெடுத்து வளர்த்துவரும் மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்ல வளர்ச்சிப் பணியில் அயராது உழைத்த உத்தமன். உண்மை நேர்மை வழியில் ஊருக்கு உழைத்த உத்தம மகான். "யாவாராயினும் நா காக்க" என்ற வள்ளுவர் வாக்கிற்கு தன்னை நியாயப்படுத்தி தான் பேசும் வார்த்தைகளால் மற்றவர் மனது புண்படாது பேசும் திறன்படைத்தவர்.

கடமையே கண்ணாகக் கொண்டு செயற்பட்ட அவர் தான் மட்டுமல்லாது தன் குடும்பத்தினரையே சமூகப் பணியுடன் ஒன்றிக்க செய்து கடமையைப் புரிந்தமையானது மிகப் பெரிய சேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர காலம் பாராது இறைபணி செய்து எந்தவித இடருமின்றி சிவனுடன் சேர்ந்து கொண்ட உத்தமன்.

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர் – வேண்டா!!
நமக்கும் அது வழியே! நாம் போம் அளவும்
எமக்கென்னென்றிட்டுண் டிரும்.

அதனால் அவர்தம் பிரிவுக்காக எம் இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவரது ஆத்மா ஸ்ரீ மீனாட்சியம்மன் திருவடியில் சங்கமமாகி நிலைத்து நிற்க ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர்
கிளிநொச்சி

## மருத்துவக் குறிப்புக்கள்

01. குப்பைமேனி — சிறுநீர் நோய்களுக்கு இதன் இலைச்சாற்றில் தேன் கலந்து பருகவும். பூனைக்கடிக்கு இதன் இலையையும் முள்ளம்பன்றிக் கூரையும் கரியாகும் படி ஓட்டில் வறுத்தெடுத்து பசு நெய்யில் அரைத்துப் பூசவும்.

02. நொச்சி — மூட்டு வலிகளுக்கு நொச்சியிலை, ஆடாதோடையிலை, ஆமணக்கிலை, வெள்ளைப்பூடு, ஆகிய ஒவ்வொன்றையும் சமஅளவு எடுத்து இடித்துபொட்டணி கட்டி நீராவியில் அவிக்கவும் பின் வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுக்கவும். தலையிடிக்கு நொச்சியிலைச் சாற்றையும் நல்லெண்ணையையும் சம அளவிட்டுக் கொதிக்க வைத்துஆறிய பின்னர் 5 துளிகளை மூக்கினால் உறுஞ்சவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னார் இயற்றிய
# ஜெயந்திநகர் அருள்மிகு மீனாட்சி அம்மன்
# திருவூஞ்சல் பாமாலை

## காப்பு

திருவளமும் கழனிகளும் காவும் ஓங்கி
திசை புகழ் ஒலி கேட்கும் பெருவன்னி
திருமேவும் கிளிநொச்சி நகரம் தன்னில்
செந்தமிழ் நாடேந்த கோவில் கொண்ட
கருணைமிகு அருள்சொரியும் கிளிநொச்சி நகர்
மீனாட்சி அம்மை மீது ஊஞ்சல் பாட
அருளுருவாய் திருவருளும் ஆனைமுகத்தான்
திருவடிகள் முன்னின்று காப்ப தாயே.

1. அம்மனருட் கருணையூஞ்சல் வடமொன்றாக
ஆற்றுபாவம் போக்குமருள் வடமொன்றாக
தம் குடிகள் காக்குமருள் வடமொன்றாக
தாரணியை அருளுமருள் வடமொன்றாக
வெம்மைதனை தணிக்கும் அருள்பீடமாக
வீற்றிருந்து விண்ணவர்கள் பாடியேந்த
சிம்மமெனச் செந்நெல்வளர் ஜெயந்திநகர்
செம்மலரே மீனாட்சியே ஆடிரூஞ்சல்

2. செவ்வாம்பல் மலர்வாவி கவிந்து நிற்க
செங்கரும்பு தென்னைவளம் சூழ்ந்து நிற்க
செவ்வேளும் கணபதியும் காவல் நிற்க
திரள்மேகம் இருள்சூழ்ந்து பன்னீர் தூவ
ஆடவரும் மங்கையரும் நயந்தே ஏத்த
நாரைகளும் கொக்குகளும் நாதம் கூட்ட
கொவ்வையிதழ் குங்குமமே குதூகலமாய்
கோமளமே மாமணியே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பக்தர்களின் உள்ளங்களில் பக்தி தாகம் பரவிநிற்க
பசுமை தரும் வீரமரம் திசைகுறிப்பு காட்டி நிற்க
வேம்படி புற்று கருவறை கோயிலாக காட்சி நல்க
பக்கமெல்லாம் வேப்பமரம் சூழ்ந்து நிற்க
திருவுள சீட்டின் மூலம் நீர் அமர்ந்தீர்
பதியாகும் ஜெயந்திநகர் தனில் உறைந்தீர்
கருணைமிகு மீனாட்சி அம்மன் பாதம் பணிந்தோம்
கற்பகமே பொற்பதமே ஆடீரூஞ்சல்

04. உன்முகத்தின் ஆயிரங்கண் அருளை வீச
உன்நாவில் பல்லாயிரம் வேதம் ஒலிப்ப
பண்ணரிய பான்மையருள் பாரைக் காக்க
பைரவியே சாமுண்டியே பாரோர் போற்றும்
தன்னிகர் இலாக்கருணைத் தாயே உன்னை
தண்மதியும் வெய்யோனும் தொழுது ஏத்த
துன்னுசுர நோய்தீர்த்து துயர் நீக்கும்
சுந்தரியே அந்தரியே ஆடீரூஞ்சல்

05. பூசகராம் சோமையரும் அறங்காவலரும்
போற்றியுனையும் பக்கவயல் உறங்கும் அன்பர்
ஆசார மிகுதொண்டர் நல்லதம்பியும்
அப்புஜீயும் ஆச்சிரம வடிவேல் சுவாமியும்
நேசமுடன் உன்னையுமிவ் விடத்தில் சேரத்து
ஐங்கரனை முன்னிருத்தி யமர்ந்தீர் இங்கு
வாசமலர் மேவுகின்ற சோலை சூழ
ஜெயந்திபுர மீனாட்சியே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. வளமுள்ள விநாயகரும் கந்தவேளும்
வாஞ்சையுடன் கனகாம்பிகை அம்பாள் தானும்
சிவநகரின் சிவனாரின் பெரும் தலமும்
சிவஞான ஆச்சிரமம் தானும் சூழ
கிளர்ந்தேகி நாம் வணங்க அருளல் போல
கேடெங்கள் குறை தீர்த்தே ஆடீரூஞ்சல்
செழுந் செந்நெல் விளைமருத உழவர் ஏத்த
சிற்றிடையில் மின்னொளிர ஆடீரூஞ்சல்

07. மருதநில சோலை தன்னுள் குரங்கு தாவ
குஞ்சரங்கள் எல்லையிடைக் குழாமாய்த் தோன்ற
உறும் பன்றிக் குழுக்களினை உழவர் ஓட்ட
ஊசி நெய்தற் வாய்க்காலில் மீன்கள் துள்ள
தெறும் பாலை வெளிவானில் திரள மேகம்
செய்யுமருட் குளிர்ச்சியாளே நித்தம் நித்தம்
நிறைமாரி பெய்துழவர் தொழில் சிறக்க
நேசமுடன் மீனாட்சியே ஆடீரூஞ்சல்

08. பூங்கரத்தில் பொற்கிளியும் கையில் ஏந்தி
ஆயிரம் கண் மலர சிங்கம் தனில் ஏறி
அருள்பொலியும் வேடத்துடன் சிலிர்த்து நிற்பீர்
அமருலகும் மூவுலகும் படைத்த தாயே!
பொற்பிரம்பு கையேந்திப் புவியைக் காப்பாய்
பூங்கழலிற் சிலம்பொலிக்க பவனிவருவாய்
கற்பகமே மீனாட்சியே கையிற் சூலி
காற்தண்டை கலகலக்க ஆடீரூஞ்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. வேப்பிலையின் நாயகியே ஆடீரம்மா
மேழியுடைக் குடிவாழ ஆடீரம்மா
பூப்பொலியத் தாரகையாய் ஆடீரம்மா
பொங்கல் மடைப் பூரிப்பீர் ஆடீரம்மா
ஆப்பொலியப் பட்டாடைகளில் ஆடீரம்மா
ஆதிவரலாறு உடையதாயே ஆடீரம்மா
மூப்படையா முன்னவளே ஆடீரம்மா
ஜெயந்திநகர் குடிகொண்டாய் ஆடீரூஞ்சல்

10. பொன்னடியைத் தினம் தொழுது பக்தர் வாழ
பூங்கரத்தில் பொற்கிளியும் தாங்கி நின்று
நின் கழுத்தில் நித்திலத்தின் மாலை சூடி
நீசரஞ்ச கற்பினொளி கண்ணில் வீச
சின்ன இடை மின் ஒட்டியானங்கட்டி
செவ்வடியிற் சிலம்பொலிக்க ஆடீரூஞ்சல்
ஜெயந்திபுர தாயே எம்மை காத்தருள்வாய்
வேதவல்லி ஸ்ரீ மீனாட்சி ஆடீரூஞ்சல்

## வாழி

எமக்கணுகுமிடரெல்லாம் தீர்ப்பீர் வாழி
ஏந்திழையே மீனாட்சி வாழி வாழி
கமத்தோடு கைத்தொழிலும் பெருக்கி வாழி
கருமேகம் மும்மாரி பொழிய வாழி
தமிழ்ப்பீடு சிவப்பீடு பெருக்கி வாழி
சான்றோர்கள் தம் கலைகள் பெருக வாழி
இமைப்பொழுதும் நீங்காதெம் நெஞ்சில் வாழி
எழில் மீனாட்சி தாயே நீ வாழி வாழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

மதுரையை ஆட்சி செய்து திறை செலுத்த
மாதர்களின் கற்பினொளி துலங்க ஆணையிட்டாய் எச்சரிக்கை

தேசமெங்கும் சின்னம்மை, பெரியம்மை தீர்ப்பாயே
நீதியை நிலை நிறுத்தி சிலம்புடைத்தாய் எச்சரிக்கை

மேதினியின் மேலவளாய் மேவியே யருள் சொரிந்தாய்
சாதிகுல பேதமற்ற சக்தியம்மா எச்சரிக்கை

வேதவல்லி மீனாட்சி வெற்றி தாருமம்மா
பாதமதைப் பாமரராய் நாம் தொழுவோம் எச்சரிக்கை

## பராக்கு

தாவிவரும் நோய் தீர்க்கும் தாரணிபராக்கு
ஏதயலாள் கற்புமிகு மீனாட்சி பராக்கு
மேவிய மதுரை பாண்டியன் புதல்வி பராக்கு
மேன்மை பெறு சுந்தரேசன் தேவி பராக்கு

## லாலி

ராசி லாலி பற்றுடையோர் நேசலாலி – எங்கள்
பூசைகளை ஏற்கும் பெருங்கோதை லாலி
தேசிலாலி தேமதுரத் தமிழர் லாலி - தேவர்
திசையெங்கும் மலர்தூவ அருள்வை லாலி
ஆசிலாலி ஏந்திழையாளே லாலி – பக்தர்
ஏந்தியுனைத் துதிக்க வருள் கூட லாலி
வாசிலாலி ஆம்பல் பொய்கைவாழி தமிழர்
வாழ்வுயர வாழ்த்தி நின்றோம் மாரிலாலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுபமங்களம்

அபிராமி வல்லியர்க்கு மங்களம் மங்களம்
ஆரவல்லி தாயார்க்குமங்களம் மங்களம்
புவி தாங்கும் பெருந்தேவி மங்களம் மங்களம்
பூவில் வாழ் தமிழர்க்கு மங்களம் மங்களம்
கவிராயர் புகழ் காப்பாய் மங்களம் மங்களம்
காவியங்கள் தந்திடுவாய் மங்களம் மங்களம்
செவியின்பம் சேர வைப்பாய் சுப மங்களம்
சேமந்தரும் தேவியார்க்கு மங்களம் மங்களம்.



## பயனுள்ள சில மருத்துவ குறிப்புக்கள்

மருத்துவம் என்பது நோய்களைக் குணப்படுத்துவதற்கான கலையும், அறிவியலும் ஆகும். இது மனிதர்களின் உடல்நலத்தைப் பேணுதல், மீள்வித்தல் போன்றவற்றிற்காக உருவாக்கப்பட்ட செயல்முறைகளை உள்ளடக்கும்.

1. வெந்தயம், சுண்டைக்காய் வத்தல், மிளகு தலா 50 கிராம் எடுத்து வறுத்துப்பொடி செய்து தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடல் எடை குறையும்.

2. முழு நெல்லிக்காய் 4, பச்சைமிளகாய் 2, வெந்தயம் சிறிதளவு மூன்றையும் சேர்த்து நன்றாக அரைத்துச் சாப்பிடுவதன் மூலம் ஜீரணக் கோளாறுகளுக்கு தீர்வு காணலாம்.

3. வெற்றிலையுடன் மிளகு மற்றும் பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் தொண்டைப்புண் மற்றும் இருமல் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொன்சுண்ணம்

*திருச்சிற்றம்பலம்*

முத்துநல் தாமம்பூ மாலைதூக்
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்னெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரன் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலகையெல்லாங்
        காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
        நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
        திருவேகம் பன்செம்பெற் கோயில் பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
        பாடி பொற்சுண்ணம் இடித்துநாமே 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
        அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
        நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
        திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பதற்கு
        ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
        உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
        காண உலகங்கள் போதாதென்றே
நல்ல அடியோமை ஆண்டுகொண்டு
        நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
        மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்துநாமே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம் ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 7

வாள்தடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டம் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற்சுண்ணம் இடித்தநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நியையஅட்டி
மேதகு தென்னம் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஜயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி அடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொடாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடி
சிங்கங் களிபப்த் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடற்பொனற் சுண்ணம் இடித்துநாமே 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொணடருமைகாட்டுப்
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்களப்பன்
எம்பெருமான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனஎம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்ப
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற் கரிய நல்த்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இன்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கண் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம்எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைக் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் என்பதே அறிவு

பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
**பிறந்து பாரென இறைவன் பணித்தான்**

படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
**படித்துப் பாரென இறைவன் பணித்தான்**

அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
**அறிந்து பாரென இறைவன் பணித்தான்**

அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
**அளித்துப் பாரென இறைவன் பணித்தான்**

பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
**பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்**

மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
**மணந்து பாரென இறைவன் பணித்தான்**

வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
**வாடிப் பாரென இறைவன் பணித்தான்**

இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்
**இறந்து பாரென இறைவன் பணித்தான்**

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

-கவிஞர் கண்ணதாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எங்கள்
குடும்ப விளக்கு
நம்மைவிட்டு சிவபதம்
எய்திய சமயத்தில் நேரில்
வந்தும் பத்திரிகைகள், கண்ணீர்
அஞ்சலிகள், பிறவழிகள்
மூலமும் உதவியும், ஆறுதல்
தெரிவித்தும் அனுதாபச்
செய்திகளை வழங்கியும் எமது
துயரில் பங்கு
கொண்டவர்களுக்கும்
இறுதிக்கிரியைகள் மற்றும்
இன்றைய ஆத்ம சாந்திப்
பிரார்த்தனைகளில் பங்கு
கொண்டோருக்கும்
எமது மனப் பூர்வமான
நன்றிகள்

இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப விருட்ச

மாசானம்பிள்ளை (அமரர்) + அன்னம்மா (அமரர்)

**சேதுபாண்டியர் +**

இராசேஸ்வரி
+
வேலாயுதம்

லவேந்திரா + அருந்ததி → ஹர்சாயினி
திரிஸ்மிதா
ஸ்ரீவித்தியா + சசிக்குமார்
தரணிஜன்
பவதாரணி
பிரபாகர் (அமரர்)
திவாகர்

நாகேஸ்வரி
+
மகாலிங்கம்

கோபிதாஸ் + ஜேனுகா → ஹபிசிகா
முரளிதாஸ் + சியாமளா
சதீஸ்கரன் + காசினி
கோகுலதாஸ்
ரஜீவ்கரன்

சத்தியேஸ்வரி
+
தர்மராசா

ரவிசாந்
ஹரிபிரசாந்த்

நாமகள்
+
கஜேந்திரகுமார்

செந்துஜன்
கஜானன்
பானுஜன்

அருட்
+
மகேஸ்

வினோ
தர்சிகா
பிரேம்



## ப விருட்சம்

மயில்வாகனம் (அமரர்) + நல்லம்மா (அமரர்)

ண்டியர் + தங்கம்மா (அமரர்)

அருட்சோதி
+
மகேஸ்வரன் (அமரர்)
↓
வினோதா + வைகுந்தன் → நிகேதன், றிஸ்வி
தர்சிகா + தேவகரன் → ஹர்னிதா
பிரேம்சாந்த்

கேதீஸ்வரன்
+
ஞானலக்சுமி
↓
அபினன்
உமேஷனன்
பிஜானன்

கிருபாகரன்
+
நிரஞ்சலா
↓
கிஷாளினி
நிஷாளினி

அம்பிகைபாகன்
+
சந்திரகலா
↓
சௌமியா
விதூசன்
நயமிதா

ள்

துமார்

ஒன்
ன்
ஒன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org